முரசொலி

ஆசிரியர்: மு.கருணாநிதி

—வார இதழ்—

முரசு 5 | 30-5-58 | வெள்ளி | ஒலி 7

தஞ்சையின் எழுச்சி!

தஞ்சை மாவட்ட மாநாடு இரண்டு நாட்கள்தான் நடைபெற்றது எனக் கூறுவது தவருகும். ஏறத்தாழ அந்த மாநாடு தஞ்சைத் தரணியில் ஒரு மாத காலம் தொடர்ந்து நடைபெற்றது என மொழிவதே சாலச் சிறப்புடையதாகும். இருபது கூட்டங்களுக்குமேல் மாநாட்டுப் பிரச்சாரக் கூட்டங்கள் நடந்திருக்கின்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் ஆயிரமாயிரம் பொதுமக்கள் கலந்துகொண்டு கழகத்தின் கொள்கை விளக்கங்களைப் பெற்றனர்.

கூட்டங்கள் நடத்திய கிளைக் கழகத்தினர் மாநாட்டு நிதியாக ஒவ்வொரு கூட்டத்திலும் நூறு ரூபாய் அளித்தனர். தங்களூரில் ஒரு மாதிரி மாவட்ட மாநாட்டையே நடத்திக் காட்டினர் என்று தலைநிமிர்ந்து கூறலாம். அப்படி நிகழ்வுற்ற மாதிரி மாவட்ட மாநாடுகள்தான் திருவாரூரில் ஒரு மாதிரி மாநில மாநாட்டை நடத்தக்கூடிய அளவுக்குத் துணை புரிந்தன. என்னே எழுச்சி—என்னே ஆர்வம்—ஒவ்வொரு சிற்றூர் பேரூர்களிலும்! நாங்கள் சொற்பொழிவாற்றச் சென்ற எல்லா ஊர்களுமே பெரும்பாலும் கிராமங்கள்! ஒன்றிரண்டே நகரவாடையுடையவை. அடடா—அவர்கள் தங்கள் ஊர்களில் நடத்திய ஊர்வலமும் — வாணவேடிக்கைகளும்—மேடையலங்காரமும் — வரவேற்பும்—இசை நிகழ்ச்சிகளும் — தஞ்சையின் புதிய கோலத்தை — கம்பீரத் தோற்றத்தை — எங்களுக்கு அறிவித்தவாறே இருந்தன.

கிளைக் கழகத்தினர்-மாநாட்டு நன்கொடையாக பத்து ரூபாய் அனுப்பிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டோம். அநேகமாக எல்லாக் கிளைக் கழகத்தின

[சென்ற இதழின் தொடர்ச்சி]

ரும் தங்கள் கடமையைச் செய்து முடித்து எங்களைக் களிக்க வைத்தனர். சுற்றறிக்கையொன்று, மாநாடு சிறப்புற வழிகள் குறிக்கப்பட்டு அனைவருக்கும் அனுப்பப்பட்டது. அந்த அறிக்கைக்குத்தான் தஞ்சை மாவட்டத்துக் கழகக் காளையர் எந்த அளவு மதிப்பு தந்தனர்! அதன் எடுத்துக் காட்டுதான் முதல்நாள் திருவாரூரின் ராஜ வீதிகள் அதிர நடத்தப்பட்ட மாபெரும் பவனியாகும்.

குடந்தைப் பெரியவரும், நமது கழகக் காவலர்களில் ஒருவருமான மதிப்புமிகு கே. கே. நீலமேகம் அவர்கள், மாநாட்டு மேடையில் அண்ணா அவர்களிடம் கூறிக் கொண்டிருக்கிருர்—அந்த வாசகங்கள் என் காதில் விழுகின்றன:

“அண்ணா! நீங்கள் சிறிது தாமதமாக வந்து விட்டீர்களே—அடடா—ஊர்வலத்தைப் பார்க்காமல் போய்விட்டீர்களே — நமது கட்சிசரித்திரத்தில் பெரிய பெரிய ஊர்வலங்கள் நடந்திருக்கின்றன; ஆனல் இதைப் போன்ற அழகும், கவர்ச்சியும், எழுச்சியுமான பெரிய ஊர்வலங்கள் இதுவரை நடந்ததேயில்லையண்ணா! பழைய காலத்து ர்ர்ஜாக்கள் ஊர்வலங்கள் இப்படி நடந்திருக்குமோ என்னமோ?”

—ஊர்வலத்தில் எனக்கேற்பட்ட மகிழ்ச்சியைவிட கே. கே. என். அவர்கள் சிறப்புரையைக் கேட்கும்போது ஏற்பட்ட மகிழ்ச்சியே அதிகம் என்பேன். அவரைப்போன்ற அனுபவமிக்கவர்கள் — பல நாட்களாகத் தொல்லை பல ஏற்று கழகத்தைக் கட்டிக் காக்கப் பெரும் பொறுப்புக்கு ஆளானவர்கள்—உள்ளத்திலே ஏற்படுகிற பூரிப்புதான் நம்மைப்போன்ற வாலிபர்கள் செய்கின்ற பணிக்குக் கிடைக்கின்ற பரிசாகும் என எண்ணி எனக்கு நானே மகிழ்ந்து கொண்டேன்.

ஒரு மாநாடு நடத்துவதென்ருல் சாதாரணமாக இருக்கிறதா? இதோ, விருத்தாசலம் மாநாட்டு வ. வே. சு. தலைவர் கோவிந்தசாமி அவர்களைப் பார்க்கின்றேன். தேர்தல் நேரத்திலேகூட அவர் முகம் இப்படிச் சுருங்கிப் போகவில்லை. உடல் கருத்துப் போகவில்லை. ஆளே உருமாறிக் காணப்படுகிருர். அவ்வளவு தொல்லைகள்—தொந்திரவுகள் — சமாளித்துத் தீர வேண்டியிருக்கிறது. “பந்தல் வேலை மாநாட்டுக்குள் முடிந்து விடுமா?” எனக் கேட்போர் ஒரு பக்கம்—“முடியாது போலிருக்கிறதே!” என முணுமுணுப்போர் ஒரு பக்கம்—“அய்யோ, மழை வரும் போலிருக்கிறதே......பட்ட பாடெல்லாம் வீணுகிவிடும் போலிருக்கிறதே” என்ற கவலை ஒரு பக்கம்—“இவ்வளவு செய்து, ஏன் சார் ஒரு நாடகம் நடத்தவில்லை?” என்று வினவுவோரும்—அதற்கு பதில் சொல்ல முடியாமல் திணறுவோரும்—“போட்டிருக்கிற கழகத்தோழர்

[8—ம் பக்கம் பார்க்க]

சுழல் விளக்கு

மாறன்

முதலாளிகளின் முகாம்-காங்கிரஸ்!

மைசூர் இராஜ்யத்திலிருந்து அடிக்கடி சுவையான செய்திகள் வெளிவரும். முன்னுள் முதலமைச்சர் அனுமந்தய்யா வடநாட்டுப் பேரரசால் தென்னுடு புறக்கணிக்கப்படுகிறது என்ற பொருள்பட பல புள்ளி விபரங்களை அள்ளிவீசி, மக்களைத் திடுக்கிட வைத்தார்!

அதோடுமட்டுமல்ல; அடிக்கடி மந்திரி சபை மாறும் விசித்தர ஸ்தலமும் அதுவாகும்! அனுமந்தய்யாவை வீழ்த்தி நிஜலிங்கப்பா பதவி ஏற்ருர். அவரை வீழ்த்தி முன்பின் அறிமுகமில்லாத ஜத்தி இன்று அரியணை ஏறியிருக்கிருர். இத்தகைய திடுக்கிடும் சம்பவங்களின் நிலைக்களன் மைசூர்!

ஆனல் இவைகள் எல்லாவற்றையும் தூக்கி அடித்துவிட்டது அண்மையில் மக்கள் சபை உறுப்பினர் இமாம் வெளியிட்டுள்ள செய்தி! செய்தி அல்ல; மத்திய அரசாங்கத்தின் பேரில் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு! பயங்கரமான குற்றச்சாட்டு! பண்டித நேருவின் பேரரசு பதில் கூறமுடியாத குற்றச்சாட்டு!

இமாம் மக்கள் சபையில் மைசூரின் பிரதிநிதி. அவர்தான் டில்லி துரைத்தனத்தாரின் துடுக்குத்தனத்தை அம்பலப்படுத்திஞர், ஆளவந்தாரின் அவையில்! மந்திரி சபையை அலங்கரிக்கும் 'கொலுப்பொம்மைகள்' கேளாக் காதினராக—பேசா பதுமைகளாக காட்சி அளித்தார்களாம்!

வெள்ளையருக்கு சொந்தமாக இருந்த கோலார் தங்கவயல் சமீபத்தில் தேசிய உடைமையாக்கப்பட்டது! மைசூர் அரசாங்கத்தாரால், ஆண்டாண்டு காலமாக கொள்ளை அடித்து வந்த வெள்ளையரின் வாயில் மண்ணைப் போடாமல், மதிப்பீட்டுக்குத் தகுந்த விலை கொடுக்கவும் இசைந்தது மைசூர் அரசாங்கம்! அதற்கென நியமிக்கப்பட்ட ஒரு குழு கம்பெனி முதலயவைகளை ஆராய்ந்து, 119 இலட்சம் ரூபாய் கொடுக்கலாம் என்று முடிவெடுத்தது. மைசூர் அரசாங்கமும் 119 இலட்சம் ரூபாய் கொடுக்க இசைந்தது!

ஆனல் மத்திய அரசாங்கம் 164 இலட்சம் ரூபாய் வெள்ளையர் கம்பெனிகுக் கொடுக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தது. மந்திரிகள் முகாரி பாடினுர்கள். மக்கள் பிரதிநிதிகள் கண்டனக் குரல் எழுப்பினர். என்ருலும் மத்தியப் பேரரசு அவைகளை துச்சமென மதித்து, 164 இலட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தியது. டில்லி அரசாங்கத்தின் 'பாவாடை நாடாவில்' தொங்கிக்கொண்டிருக்கின்ற மைசூர் அரசாங்கம், 164 இலட்சம் ரூபாயை வெள்ளையருக்கு அள்ளிக் கொடுத்தது! அதாவது 45 இலட்ச ரூபாய் அதிகமாக, மதிப்பீட்டுக்கு மேலாக கொட்டிக் கொடுக்கப்பட்டு விட்டது!

இதற்குத்தான் விளக்கம் கேட்டார் இமாம், மக்கள் சபையில்!

"45 இலட்சம் ரூபாய் அதிகமாகக்' கொடுக்கப்பட்டதற்குக் காரணம் என்ன? மைசூர் அரசாங்கம் ஆட்சேபணை எழுப்பியும், அதைப் புறக்கணித்து, அமைக்கப்பட்ட குழு சிபாரிசு செய்ததையும் விட 45 இலட்சம் ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்பட்டதன் மர்மம் என்ன? அதற்கு பொறுப்பாளி யார்? யார்?" என்று இடியென முழங்கினுராம், இமாம்!

இடிக் குரலைக் கேட்க நாகம் போல நாடாள்வோர் நடுங்கி, நாவசைக்க பயந்தனராம்!

"முந்திரா ஊழலைவிட இது மோசமானது!" என்று கூறியிருக்கிருர் சுந்தரநாத் என்ற மற்ருெரு அங்கத்தினர்!

டில்லி அரசாங்கம் இராஜ்ய அரசாங்கப் பணிகளில் தலையிட்டு, வெள்ளையருக்கு வக்காலத்து வாங்கி, 45 இலட்சம் ரூபாய் அதிக லாபம் பெறச் செய்திருக்கிறது.

பல ஆண்டுகளாக பல இலட்ச ரூபாய்களை இலாபம் சம்பாதித்திருக்கிறது அந்தப் பரங்கிக் கம்பெனி. இப்படி இருந்தும் குழு சிபாரிசு செய்ததைவிட அதிகமாக பணம் கொடுக்க வேண்டிய மர்மம் என்ன? இந்த 45 இலட்சம் ரூபாயும் யாருடையது? இரத்தத்தை வியர்வையாக்கி, கும்பி காய குறை உணவு உண்டு, தங்கள் வாழ்வை நினைத்துத் தேம்பி அழும் மக்கள் கொடுத்த வரிப் பணம்!

மக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டவராக நாடாள்வோர் இருந்தால் அல்லவா, நாட்டு மக்கள் அளித்த இந்தப் பணத்தை நாட்டைச் சூறையாடிய வெள்ளையருக்குக் கொட்டிக் கொடுக்கத் தயங்கும்? முதலாளிகளின் வாலைப் பிடிக்கின்ற இவ்வரசாங்கம் 45 இலட்சம் ரூபாய் அதிகமாகக் கொடுத்ததில் வியப்பில்லை தான்!

மேடையிலே முழங்குகிருர்கள் மக்களின் நல்வாழ்விற்குப் பாடுபடுவதாக! ஆனல், அவர்களின் நடவடிக்கையோ முதலாளிகளின் இரும்புப் பெட்டியை நிரம்பச் செய்கிறது! காங்கிரஸ் பணக்காரர்களின் பாசறை — முதலாளிகளின் முகாம்—என்று கூறும்போதெல்லாம், நம்மைக் கண்டிக்கும் கனதனவான்கள் இதற்கு என்ன பதில் கூறுவார்கள்?

ஆவடித் தீர்மானத்தை சுட்டிக் காட்டிப் பேசும் காங்கிரஸ் பக்தர்கள் இதற்குக் கூறும் பதில் என்ன? பதில் என்ன? ஃ

பெரிய விழிப்பு!



காங்கிரஸ் இயக்கத்தில் இப்போது மீண்டும் பெரிய விழிப்பு ஏற்பட்டிருக்கிறதாம்! —'சங்கர்ஸ் வீக்லி'

தேடுகிருர்கள்; தேடுகிருர்கள்!

மேற்கு வங்காள காங்கிரசார் தேர்தலில் போட்டியிட ஆள் தேடுகிருர்கள்; தேடுகிருர்கள் திக்கெட்டும்! தேடித் தேடி அலுத்துவிட்டார்கள்! ஆள் கிடைத்தபாடில்லை! இவர்களைக் கண்டாலே ஓடி ஒளிந்து கொள்ளுகிருர்களாம் சில பெரியவர்கள்!

காங்கிரசின் பெயரில் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆள் கிடைக்கவில்லை...என்ன பரிதாப நிலை! சித்தர ரஞ்சன தாசும், சுபாஷ் சந்திர போசும் புரட்சிக் கனலில் புடம் போட்டு எடுத்த காங்கிரஸ்—அரவிந்தரும், ரவீந்தரரும் இலக்கிய சுவையினைக் கூட்டி சமைத்த காங்கிரஸ்—மோகன் தாஸ் கரம்சந்த் காந்தியாரின் கரம் அசைந்தால் நாட்டு மக்களின் சிரம் அசைந்த பெருமை வாய்ந்த காங்கிரஸ் — இன்று ஆள் தேடிப் பிடிக்கும் பரிதாப நிலைக்கு ஆளாகியிருக்கிறது!

வீழ்ச்சி! மகத்தான வீழ்ச்சி!

மேற்கு வங்காள காங்கிரஸ் அரசாங்கத்தின் அரியாசனத்தில் அமர்ந்திருந்து. அண்மையில் மந்திரி சபையிலிருந்து வெளியேறிய சித்தார்தரேவுக்கு எதிராக போட்டியிடத்தான் ஆள் தேடுகிருர்கள், காங்கிரசார்! "ஊழலும், ஊதாரித்தனமும் மலிந்து விட்டது காங்கிரஸ் ஆட்சியில்—இனி பணிபுரியேன் இந்த அவையில்" என்று மந்திரி பதவியையும், காங்கிரஸ் அங்கத்தினர் பதவியையும் விட்டு வெளியேறியவர் இவர்! அரண்மனை வாசத்தையும், ஆடம்பர வாழ்வையும் துறந்து மக்களுக்கு அறநெறி போதிக்க பொதிகை மரத்தை தஞ்சமடைந்தார் கபிலவஸ்துக் கோமான்; இந்த சித்தார்தரோ மக்களுக்கு பணிபுரிய மந்திரி பதவியை உதறி சுயேட்சையாகப் போட்டியிடப்போகிருர். அவருக்கு எதிராக போட்டியிட ஒரு 'பொம்மை'கூட கிடைக்கவில்லை காங்கிரசுக்கு! ஆம்; நேர்மைக்கு எதிராக போட்டியிட யாருக்குத்தான் தைரியம் பிறக்கும்?

சித்தார்த்தரே வங்காள மந்திரி சபை மீதும், காங்கிரஸ் ஸ்தாபனத்தின்மீதும் சுமத்திய குற்றச்சாட்டுகளை இதுவரை யாரும் மறுக்கவில்லையாம்!

சுசேதா கிருபாளானியைத்தான் பணிந்து கேட்டுக்கொண்டார்களாம், ரேவுக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிட! அவ்வம்மையார், அந்த 'அன்பழைப்பை' ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்களாம்!

வங்காள காங்கிரசைச் சேர்ந்த வேருெரு பிரபலமான ஒரு அம்மையாரை அணுகினுர்களாம். அவர்களோ, 'நான் ரேவின் கருத்துக்களை ஆதரிக்கவில்லை என்று காங்கிரசாருக்கு நம்பிக்கையிருக்கிறதா?' என்ற வினவை எழுப்பி, திக்கு முக்காடச் செய்து விட்டார்களாம்!

யார் யாரையோ தேடித் தேடி அலுத்துவிட்டார்களாம், பாவம்! தேர்தலும் நாள் குறிக்காமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது! அகிலமெலாம் புகழ அரியாசனம் வீற்றிருக்கும் காங்கிரசுக்கு ஆள் தேடுகிருர்கள்! ஓடி ஓடித் தேடுகிருர்கள்! வெட்கம்! வெட்கம்! ஃ

வெள்ளி 30-5-58 சென்னை

ஈழத்தில் இரத்தக் களரி!

உலகமேலாம் புகழ; புகழ்மலையின் உச்சியிலிருந்து ஆட்சி முறை வகுத்து பண்பாட்டின் சின்னமாய் வளர்ந்த தமிழினம் இன்று தளர்ந்த இனமாய்; தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்த நாயினும் தாழ்ந்து தான் வருகிறது என்பதை மேலும் உறுதிப்படுத்துவதாக இருக்கிறது, சமீபத்திலே இலங்கையிலிருந்து வருகின்ற இடிபோன்ற செய்திகள்!

மனித குலம் தோன்றிய இடமாம்; முதல் மனிதனுக்குத் தொட்டில் கட்டித் தாலாட்டுப் பாடிச் சீராட்டி வளர்த்த தமிழகத்திலே இன்று வேற்று நாட்டாராம் வடநாட்டாரின் நயவஞ்சகக் காட்டு ராஜா தர்பார் நடைபெற்ற வண்ணம் இருக்கிறது!

பாம்புரிபோல் நுண்ணிய நூலினால் ஆடைகள் செய்து அவனியெங்கும் அனுப்பி அவர்கள் மானத்தை மறைத்தவனது பூமியிலே வள்ளுவர் வழி வந்த கைத்தறியாளர்கள் பிள்ளை விற்று; தொல்லைகள் பல அனுபவித்துக் கண்ணீர் வெள்ளத்திலே வாழ்க்கை யெனும் ஓட்டைப் படகைத் தள்ளிக் கொண்டு போகிறார்கள்!

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே; இரும்பு கண்டு; அதிலிருந்து வாள் வடித்து; மாற்றார் தாள்பணியாது வாழ்ந்த இனம், தமிழினம்! இன்றோ அவன் மண்ணுக்குக் கீழேயிருக்கும் இரும்புக் கனியைத் தோண்டி யெடுப்பதற்கு நாதியில்லை!

கடலைக் கண்டு காசினியோர் கதிகலங்கி நின்ற காலை; நாவாய் ஓட்டி; புயல் கிழித்துச் சென்று பெருமை பெற்றான், தமிழன்! இன்றோ அவன் கடல் வளத்தைப் பெருக்குவதற்கும், பயன்படுத்திக் கொள்வதற்கும் வசதியில்லை! அதற்குப் பதில் 'என்னைக் கவனியாது இருக்கிறாயே; இளித்தவாயனே'—என்று கடல் மாதா எழுப்பும் கர்ச்சனையைத்தான் கேட்க முடிகிறது!

அன்றொரு நாள் மந்தை மந்தையாய் சிங்களவரை ஓட்டிவந்து அவர்கள் செறுக்கடக்கும் விதத்திலே கல்லணையைக் கட்டி முடித்தான், கரிகாலன்!

ஆனால் இன்றோ அந்தத் தென்னிலங்கைத் தீவினிலே கரிகாலன் வழி வந்தோரின் முகத்திலே குழைத்துக் குழைத்துக் கரி பூசப்படுவதைக் காண்கிறோம்!

கரி பூசப்படுவது மட்டுமல்ல; அவன் குரல் வளையை நெறிக்கும் கோரச் சம்பவமும் தொடர்ந்து நடைபெறுவதற்கான சதியும் உருவாகிவிட்டது!

கோட்டக் கோட்டப் புழுவும் குளவியாவதைக் கேள்விப் பட்டிருக்கிறோம்!

வலுவில்லாத பூனையைத் துரத்தத் துரத்த—தப்பி ஓடுவதற்கு வேறு வழி இல்லாத நேரத்தில் அது கோரமாய்த் திரும்பி; கொடும் புலியாய்ச் சீறி தாவுவதையும் கண்டிருக்கிறோம்!

இன்று இலங்கையிலே உருவாகியிருக்கும் விரும்பத்தகாத நிலைக்கான விளக்கமும் இதுதான்!

'குட்டக் குட்டக் குனிபவனும் புத்திசாலியல்ல; குட்டுகிறவனும் புத்திசாலியல்ல'—என்று பழமொழி சொல்வார்கள்.

அந்தப் பழமொழி உண்மை உருப்பெற்ற சம்பவத்தைத்தான் இன்று இலங்கையிலே நடைபெறும் இரத்தக் களரி உணர்த்துகிறது.

மலைத் தோட்டங்களில் மிகுதியாகவும்; இதரப் பகுதிகளில் பரந்தும் வாழ்கின்ற தமிழர்களுக்கு நியாயமான மனித உரிமைகள் அனைத்தும் சிங்களவரைப் பெரும்பான்மையாகப் பெற்ற அரசாங்கத்தால் மறுக்கப்பட்டன!

இலங்கைத் தமிழர்களுக்கும் அநீதியிழைக்கத் தயங்கவில்லை, ஆட்சிபீடமேறியோர்கள்!

பெரும்பான்மையினர் பேசுகிறார்கள்—என்கிற ஒரே காரணத்தைக் காட்டி தமிழுக்குக் குழி பறிக்கும் விதத்திலே சிங்களத் திணிப்பிற்கு வெகு வேகமாகப் பிரயத்தனம் செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து கார் எண்களுக்கு முன்னால் சிங்கள எழுத்தைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டு தமிழர்கள் அனைவரையும் செயலுக்குத் தூண்டியது, சிங்களவர் அரசாங்கம்!

இதுபோன்ற ஆபத்துகள் அடுக்கடுக்காய் ஏற்படவே பூனையாக இருந்த இலங்கைத் தமிழன் புலியாக மாறினான்! குட்டக் குட்டக் குனிவது முட்டாள்தனமென்பதை உணர்ந்து; அப்படிக் குட்டுவதும் முட்டாள்தனம் என்பதைச் சிங்கள வெறியர்களுக்கு உணர்த்தத் தலைப்பட்டான்!

—இதைத் தொடர்ந்துதான் சிங்களவர்களிடமிருந்து நியாயத்தை எதிர்பார்ப்பது சிறுத்தையிடம் இரக்கத்தை எதிர்பார்ப்பது போல என்பதை உணர்ந்து அமைதியான சட்டமறுப்பு செய்வது என்று தமிழரசுக் கட்சித் தீர்மானிக்கும் நிலைமைக்குக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

—இது பொறுக்கமாட்டாத மொழி வெறியர்கள் தமிழரசுக் கட்சியின் மாநாட்டிற்குச் சென்று கொண்டிருந்த பிரதிநிதிகள் பிரயாணம் செய்த புகைவண்டியைக் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்ய; அதில் மூவர் உயிரிழந்து; பலர் காயமடைந்திருக்கின்றனர்.

இதைத் தொடர்ந்து பல இடங்களில் தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன.

பலாத்கார வெறித் தாண்டவம் பயங்கரமான அளவில் வளர்ந்து இதுவரையில் சுமார் இருபதுக்கு மேற்பட்டோர் உயிர் துறந்திருக்கின்றனர்.

கடைகளை உடைத்துச் சூறையாடுவதும்; கார்கள் கவிழ்க்கப்பட்டு எரிக்கப்படுவதும் இன்று அங்கே சர்வசாதாரணமாகி விட்டன!

மொழி வெறியர்களால் நாட்டு வெடிகுண்டுகள் மிகச் சர்வசாதாரணமாக உபயோகிக்கப்படுவதிலிருந்து இவை திட்டமிட்டு செய்யப்படும் கலவரங்கள்—என்கிற எண்ணம்தான் உருவாகிறது.

மேற்கொண்டு இந்தக் கலவரங்கள் பரவாமல் அரசாங்கம் என்னதான் முயற்சி எடுத்துக் கொண்டாலும் இதுபோன்ற பலாத்கார சூழ்நிலை உருவாகிற அளவுக்கு நிலைமையை வளர்த்ததற்கு முழுக்க முழுக்க பொறுப்பேற்க வேண்டியவர் முதலமைச்சர் பண்டாரநாயகாவாகத்தான் இருக்கிறார்.

இதுவரையில் பெரும்பாலான சிங்களவர்களிடையே வெறி உணர்ச்சி ஏற்படுத்தப்பட்டதைக் காலத்தில் உணர்ந்து; தடுத்து நிறுத்தாதது அவர் செய்த மாபெரும் குற்றமாகும்!

இன்றோ நாளையோ இந்தப் பலாத்காரச் செயல்கள் நிறுத்தப்படலாம்—ஆனால் இலங்கையிலுள்ள பிரச்சினை இதுவல்ல.

மொழிப் பிரச்சினை—

தமிழர்வாழ் பகுதிகள் தனியாக்கப்பட்டு சிங்களப் பகுதிகளுடன் சம அந்தஸ்து உள்ள மத்திய ஆட்சி ஏற்பட வேண்டும் என்கிற பிரச்சினை—

குடியேறிய தமிழர்கள் என்று சொல்லப்படுவோரின் உரிமைப் பிரச்சினை—

—இவை மூன்றையும் நல்ல முறையில் தீர்க்காத வரையில் இலங்கையில் பரிபூரண—நீண்ட—அமைதி நிலவ முடியாது என்பதைத்தான் நாம் குறிப்பிட வேண்டியிருக்கிறது! ஃ

தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம்

தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் **6—6—58** வெள்ளியன்று, காலை **10**-மணிக்கு, சென்னை—நுங்கம்பாக்கம் அவின்யூ ரோடு, **9** எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்.

—**தலைமைக் கழகம்** (தி. மு. க.)

பூஞ்சோலையின் வீட்டிலிருந்து வெளியேறிய தீச்சட்டி சிங்காரத்திற்கு நேரே எங்கு போவது என்று புரியவில்லை. தற்கொலை செய்து கொண்ட மைனா, பழியைத் தன்மீது சுமத்தியதற்குக் காரணம் என்னவாயிருக்கும் என்ற கேள்வி வேறு அவனைக் குடைந்து கொண்டேயிருந்தது. எதற்கும் போலீஸ் அதிகாரிகளிடம் தானே நேரில் சென்று விபரம் அறிவதும், விஷயத்தை அவர்களுக்கு விளக்குவதும்தான் நல்லது என்று தீர்மானித்தான். நாம் நடப்பதை ஒழுங்காக நடந்துகொண்டால் அதற்கு மேல் சரியோ தவறோ நடப்பது நடக்கட்டும் என்ற துணிவு ஏற்பட்டது அவனுக்கு.

போலீஸ் அதிகாரிகள் மைனாவின் சேலை முந்தானையில் முடிந்திருந்த கடிதத்தை அவனிடத்திலே காட்டினார்கள். கடிதத்தில் அவள் கையெழுத்தில்லை. சிங்காரத்திற்கு சந்தேகம் எழுந்தது; கையெழுத்தில்லாமல் கடிதம் எழுதுவாளா என்று! அவனுக்கு அவளது எழுத்தும் அடையாளம் புரியாது. அதிகாரிகள் அவனைக் கேட்டனர், "இது அவளது கையெழுத்துத்தானே?" என்று! சிங்காரம் நிலைமையைச் சிறிது விளக்கினான். மைனாவைப் பற்றிய விபரங்களைப் போலீசாருக்கு ஓரளவாவது தெரிவிக்கவேண்டுமென்று விரும்பினான். அந்த விளக்கம், தன்னை வீண் பழியிலிருந்து விடுவிக்காதா என்ற ஆவல் வேறு அவனுக்கு! மைனாவின் சவத்தைப் படம் பிடித்துவைத்திருந்தார்கள் போலீசார். அதைப் பார்த்துச் சிங்காரம் வடித்த கண்ணீர் அவர்களுக்கே ஆச்சரியத்தை உண்டாக்கியது. மைனாவின் கையெழுத்தை அடையாளம் கண்டுபிடித்து, இது மைனாவின் கடிதமல்லவென்று முடிவு கூறப்பட்டுவிட்டால் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம், மாசு நீங்குமேயென்று அவன் துடிதுடித்தான். மைனாவுக்கு ஒரு கணவன் இருப்பதை அறிவித்து, பேரூர் பீதாம்பர பாகவதர் என்ற முகவரியையும் போலீசாருக்கு அவனே தந்தான். அவனே போலீசாரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டதின் பேரில் ஒரு அதிகாரி, அவனுடன் பேரூருக்குச் சென்று பீதாம்பர பாகவதரிடம் விபரமறியப் புறப்பட்டார். எப்படியாவது தான் களங்கமற்றவன் என்பதை நிரூபித்தாக வேண்டுமே—அதனால் சிங்காரம் மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டான்.

●

திடுமெனப் போலீஸ் அதிகாரி, தன் வீட்டுக்கு வந்ததைக் கண்ட பீதாம்பரம் நடு நடுங்கிப் போனார். பயப்படவேண்டாம் என அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு, மைனாவின் போட்டோ படத்தை எடுத்துக் காட்டி, "இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?" என்று அதிகாரி கேட்டார்.

"யாரது? என் மைனாபோல இருக்கே!......அய்யோ, இது என்ன படம்? மைனா செத்து விட்டாளா?" என்று அலறினார் பாகவதர். சிங்காரம், விழி கலங்க நின்று கொண்டிருந்தான்.

"மைனா என்பது யார்? உங்களுக்கு என்ன உறவு?"—அதிகாரி கேட்டார்.

"அவள் என்......"

"மனைவி" என்று கூற நினைத்தார் பாகவதர். ஆனால் வார்த்தை வெளிப்படவில்லை. அவளை இனி மகளாகவே கருதுவதாக அவளிடமே வாக்களித்திருக்கிறாரே!

அதிகாரி விடவில்லை. "மைனா உங்கள் மனைவிதானே...?" என்றார்.

பாகவதர் மறுக்கவில்லை. ஒத்துக் கொண்டு தலையை மட்டும் அசைத்தார்.

"மைனா, தற்கொலை செய்து கொண்டாள்......" — அதிகாரி முடிப்பதற்குள், "எனக்கு முன்பே தெரியும்; அவளுக்கு அதைத்தவிர வேறு வழியில்லை. என்னைப் போன்ற பாவிக்கு வாழ்க்கைப்பட்டால் ஒரு பெண்ணுக்கு இதுதான் முடிவாக இருக்க முடியும்..." என்று கண்கலங்க, நாக்குழறப் பேசினார் பீதாம்பரம். அதோடு நிறுத்தவில்லை அவர். அதிகாரியிடம் தன் உள்ளத்தை அப்படியே திறந்து காட்டிவிட விரும்பினார். மைனாவுக்கும் தனக்கும் நடைபெற்ற திருமணம்—இருவரிடையே ஏற்பட்ட ஏமாற்றம் — ஏக்கம் — பிரிவு— இறுதியாக மைனாவை சந்தித்தது — எல்லாவற்றையும் கூறிவிட்டு நடிகர் தேம்பித் தேம்பி அழுதார்.

சிங்காரத்தின் இருதயத்திலே நூற்றுக் கணக்கான சம்மட்டியடிகள் விழுந்து கொண்டேயிருந்தன. மைனா, இந்த சோகக் கதையைத் தன்னிடம் சொன்னபோதே அவளைத் திருத்திக் கணவன் வீட்டுக்கு அனுப்பியிருக்க வேண்டியதல்லவா தன்னுடைய கடமை யென்று எண்ணி வேதனைப்பட்டான். ஆனால், அடுத்த கணம் அவனே தன்னைத் தேற்றிக் கொண்டான். மைனா, கணவன் வீட்டில் என்ன சுகங் காணப் போகிறாள்......அவள் இளமைக் கனவுகள் பலித்திட அங்கென்ன மார்க்கமிருக்கிறது... ஆகவே தான் செய்ததும் ஒரு விதத்தில் சரியென்று தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான்.

ஒரு கணவன், தன்னுடைய மனைவியின் மனோநிலைகளை இவ்வளவு அப்பட்டமாக வர்ணிப்பதையும், தான் செய்த தவறுகளைத் தானே உணர்ந்து, அதற்காகக் கலங்குவதையும் கண்ட அதிகாரி, உண்மையிலேயே மனமுருகினார்.

"ஏன்? என் மனைவி தற்கொலை செய்து கொண்டதற்காக என்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கச் சட்டமிருக்கிறதா? இருந்தால் கொடுக்கிற தண்டனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். என் கதையெல்லாம் கேட்டீர்கள். எனக்கும் என் மைனாவுக்கும் எவ்வளவு தொடர்பு என்பதையும் புரிந்து கொண்டீர்கள். அவள் என்னை விட்டுத் தனிமையில் வேறு ஊரில் வாழ்ந்ததையும் அந்த ஊரில் யாரைக் கேட்டாலும் சொல்வார்கள். அதற்கு மேலும் ஏதாவது என்மீது குற்றம் சுமத்த வழியிருந்தால் தாராளமாக அதை ஒத்துக் கொண்டு அடங்கி நடக்க சித்தமாயிருக்கிறேன்" என்று பீதாம்பரம் தழு தழுத்த குரலில் மொழிந்தார்.

"அப்படியெல்லாம் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. மைனா எழுதிய கடிதம் ஏதாவது உங்களிடம் இருக்கிறதா? ஒரு கையெழுத்தை ஒப்பிட்டு அடையாளம் பார்ப்பதற்காக அது தேவைப்படுகிறது— இருந்தால் தர முடியுமா?" என்றார் அதிகாரி.

பீதாம்பரம் சிறிது நேரம் யோசித்தார். பிறகு, ஏதோ நினைவு வர எழுந்து உள்ளே சென்றார். வெகு நேரமாகியும் வெளியே வரவில்லை. உள்ளே ஏதோ பெட்டி, சட்டிகள் உருளுகிற சப்தம் மாத்திரம் கேட்டுக் கொண்டிருந்தது. 'மியாவ்' என்ற ஒலியோடு மைனாவின்

எதிர்பார்த்த எமது புதிய வெளியீடுகள்!

* ஒப்பற்ற துப்பறியும் நாவல்!

உயிரை வாங்கிய உயில்

(ரா. வேங்கடசாமி) விலை ரூ. 1—25

★

* சிந்தனைச் சிற்பியின் சிறந்த வரலாற்றோவியம்!

ரோம் நாட்டு வீரன்

(சி. பி. சிற்றரசு) (அச்சில்)

★

* இலக்கியச் சுவை சொட்டும் இன்பத் தமிழ்க் கருவூலம்!

தேனலைகள்

(மு. கருணாநிதி) (அச்சில்)

எழுதுங்கள்:—

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை சாலை :: திருச்சி—8.

பூனைக்குட்டி தெருப் பக்கம் வந்தது. அதைக் கண்ட சிங்காரம், வாரியெடுத்து மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான். மைனாவை அணைத்துக் கொள்வது போலவே ஒரு உணர்ச்சி அவனுக்கு! அவன் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்ததை அதிகாரி கவனிக்கவில்லை. கண்ணை மூடிக் கொண்டான். தீச்சட்டி ஆட்டம்—வீட்டுத் திண்ணையோரத்திலே மைனா — அந்த மோகனப் பார்வை — இரவு சந்திப்பு—இன்ப வெள்ளம் — அன்புப் பிரிவு—அடுக்கடுக்காக உள்ளத் திரையில் படக் காட்சிபோல மாறி மாறித் தோன்றின.

"இதோ இருக்கிறது—மைனாவின் கடிதம். அவள் எனக்கு எழுதிய முதல் கடிதமும் கடைசிக் கடிதமும் இதுதான்" என்று கூறிக்கொண்டே பீதாம்பரம் வெளியே வந்தார்.

"தன்னுடைய அழகான உருவப் படத்தையும் வைத்து, மணந்து கொள்ளவேண்டும் என்ற விண்ணப்பத்தையும் இணைத்து அவள் அனுப்பிய ஓலை இதுதான். என் மைனா எனக்கு அன்போடு எழுதிய கடிதம் இதுதான்!"

பீதாம்பரம், மேலும் வேதனையோடு கடிதத்தை அதிகாரியிடம் கொடுத்தார். அதை, சிங்காரமும் ஆவலோடு பார்த்தான். பிரேதத்தின் சேலையிலிருந்து எடுக்கப்பட்ட கடிதத்தை அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தார், அதிகாரி. இரண்டுக்கும் நிரம்ப முரண்பாடு.

சிங்காரத்திற்கு ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. "அப்பாடா! தப்பினேன் பெரிய பழியிலிருந்து!" எனத் தனக்குத்தானே கூறிக் கொண்டான். ஆயினும் அவனுக்குத் தற்கொலைக்கான சரியான காரணம் புரியவில்லை. பீதாம்பரம் கூறிய விளக்கத்திலிருந்து, ஒருவேளை அவர் அவளை இறுதியாகச் சந்தித்த பிறகு தற்கொலை முடிவை தேர்ந்தெடுத்திருப்பாரோ என்ற சந்தேகம் அவனைச் சூழ்ந்து கொண்டது. அதிகாரியை ஊருக்கு அனுப்பிவிட்டு எப்படியாவது பாகவதரிடம் அந்த உண்மையை அறிந்து கொண்டு வரவேண்டுமென அவன் பரபரப்பு கொண்டான்.

அதிகாரிக்கு, சிங்காரத்தின் மீதிருந்த சந்தேகம் நீங்கிவிட்டதென்றாலும், மைனாவின் சேலையில் அந்தக் கடிததத்தை சிங்காரத்திற்கு விரோதமாக முடிந்து வைத்தது யாராக இருககுமென்ற ஐயப்பாடு பலமாக எழுந்தது. அதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆவலும் பிறந்தது. சிங்காரமும், சிலரைச் சந்தேகப்பட்டானே தவிர, யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல அவன் துணியவில்லை.

பீதாம்பரம், மைனாவின் கடிதம் என்றென்றும் ஞாபகத்திற்காக இருக்க வேண்டுமென்று திரும்பக் கேட்டார். அப்போது, தீச்சட்டி சிங்காரத்தைப் பற்றிக் கூறவேண்டிய அவசியம் அதிகாரிக்கு ஏற்பட்டது. "சிங்காரத்தின்மீது போடப்பட்ட பழியை இந்தக் கடிதம்தான் மறுக்கிறது. அதனால் இது சில நாளைக்குப் போலீசாரிடம்தான் இருக்க வேண்டும். பிறகு உங்களிடம் திருப்பித் தந்து விடுகிறோம்" என விளக்கினார்.

'தீச்சட்டி சிங்காரத்திற்கு தன்னைப் பற்றிய விபரங்கள் எப்படித் தெரியும்? அவன்மீது பழி எவ்வாறு சுமத்தப்பட்டது?' என்று பீதாம்பரம் அறிய விரும்பினார். ஆனால் அதிகாரியின் முன்னிலையில் அவைகளைக் கேட்க விரும்பவில்லை. சிங்காரமும் பீதாம்பரமும் இருவரும் தனியே சந்தித்துப் பேச விரும்பினார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விபரம் தேவைப்பட்டது. அதனால் ஒருவரையறியாமல் ஒருவர், போலீஸ் அதிகாரியை மட்டும் தனியே முதலில் அனுப்பி விட வேண்டுமென்று தீர்மானித்தனர். ஆனால் அதிகாரி, சிங்காரம் தன்னோடு திரும்பி ஊருக்கு வரவேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்தி, தற்கொலைக்கும் அவனுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்பதை நிரூபிக்க வேண்டியதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையையும் எடுத்துக் கூறி, அவனையும் அழைத்துக்கொண்டு பீதாம்பரத்திடம் விடைபெற்றுப்புறப்பட்டார். சிங்காரம், அந்தப் பூனைக்குட்டியை மீண்டும் ஒருமுறை ஆவலாகத் தூக்கி முத்தமிட்டு, பிறகு அதை பீதாம்பரத்தின் கையிலே கொடுத்துவிட்டுக் கிளம்பினான்.

●

அண்ணன்மீது சுமத்தப்பட்டிருந்த பழி நீங்கிவிட்டதைக் கேட்டு கற்பூரம் மகிழ்ச்சிக் கடலில் குதித்தாள். ஊராரும் சிங்காரத்தைப் பார்த்துத் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டனர். "பயந்தே விட்டேன் அண்ணா! உன்மீது போடப்பட்ட வீண்பழியை நம்பி, எங்கே பொன்மணி உன்மீது தவறான அபிப்பிராயம் கொண்டுவிடுகிறாளோ என்று!"—கற்பூரம் மெதுவாகப் பேச்சைத் தொடங்கினாள்.

"பொன்மணியா? அவள் எந்தக் காலத்திலும் என்மீது தவறான அபிப்பிராயம் வைக்கமாட்டாளே!"—சிங்காரம் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"ஓ, அந்த அளவுக்கு வந்துவிட்டதா? நான் இதற்குள் இவ்வளவு எதிர்பார்க்கலியே..."

"ஏன், எதிர்பார்க்கல்லே... என்னை விடுதலை செஞ்சி வெளியே அனுப்பியதே அவள்தானே!"

"ஓகோகோ...அப்படியா சங்கதி? அண்ணே! எனக்கு அதுகூட ஆச்சரியமில்லே — உன் மேல பிடிச்ச பேய்கூட பொன்மணி கிட்ட வந்ததும் ஓடிப் போய்விட்டதே—அதான் ஆச்சரியம்!"

"எல்லாம் எனக்குத் தெரியும் கற்பூரம்! எனக்கும் பொன்மணிக்கும் முடிச்சுப் போட நீ ஆடிய நாடகம்தான் அதுன்னு எனக்கு நல்லாத் தெரியும்!"

"ஆ...!"

"பயப்படாதே! அண்ணன் மேல உள்ள அன்பிலேதான் அப்படி செஞ்சியே தவிர, வேற தவறாக நீ செய்யவில்லை! ஆனாலும் உன்னைப்போல இருக்கிற பெண்களுக்கு இந்த [illegible] புத்தியெல்லாம் வரக்கூடாது!"

"நீ எதுவேண்டுமானாலும் என்னைத் திட்டு — கவலையில்லை. அந்த அழகான பச்சைக் கிளி, பொன்மணி, எங்க அண்ணனுக்குக் கிடைச்சா அதுவே போதும்!"

"நானும் பொன்மணியும் ஒப்பந்தம் செய்து கொண்டோமே; உனக்குத் தெரியுமா?"

"அடேடே......ஒப்பந்தங்கூட ரகசியமாக ஆகிவிட்டதா? அடி கற்பூரம்! நீ கெட்டிக்காரிடி—கெட்டிக்காரி! அண்ணா! என்ன ஒப்பந்தம் அது?"

"இனிமேல் எப்போதும் நான் அண்ணன்—பொன்மணி என் அன்புத் தங்கச்சி! இதுதான் ஒப்பந்தம்!"

"விளையாடாதே அண்ணே!"

"விளையாட்டு ஒண்ணுமில்லை கற்பூரம்! இனிமேல் இந்த சிங்காரத்துக்குக் கல்யாணமே கிடையாது! ஒருவேளை, மைனா மறுபடியும் உயிர் பிழைச்சு வந்தாதான் குடும்ப வாழ்க்கை! இல்லாவிட்டால் இதே நிலைமைதான் எப்போதும்! உலகத்திலே பிறந்திருக்கிற பெண்கள் முழுவதும் எனக்குத் தாய்கள், தங்கைகள், அக்காள்கள்! ஒரே ஒருத்தி எனககு மனைவியாகப் பிறந்தாள் — அவள் மாண்டுவிட்டாள்! மாண்டுவிட்டாள்!" — இதைக் கூறிவிட்டு, சிங்காரம் 'கோ' வென்று அழ ஆரம்பித்தான். கற்பூரம் எதுவும் பதில் பேச முடியாமல் நின்றாள்.

அப்போதுதான் அவள் வீட்டிலே நுழைந்த அடுத்தத்தெரு அகிலாண்டம், "அடி கற்பூரம்-கேட்டியா சேதியை! உங்க அண்ணன், போலீசுக்கு லஞ்சம் கொடுத்துக் குற்றத்திலேயிருந்து தப்பிச்சுக்கிட்டான்னு நம்ப கரகமாடிக் கண்ணன் ஊரெல்லாம் பிரச்சாரம் செய்துகிட்டிருக்கான்!" என்று நீட்டி முழக்கினாள்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததுதான் தாமதம்..."ஆ! அவன் வாயை மூடிக்கிட்டு இருக்க மாட்டானா? பார்க்கிறேன் ஒரு கை, அவனை! ஒண்ணு இந்த ஊர்ல நான் ஒழியணும் — இல்லே அவன் ஒழியணும்!" என்று உறுமிக் கொண்டு பாய்ந்தான் சிங்காரம்.

கற்பூரம், "அண்ணா, அண்ணா! நில்லு!" என்று பதைபதைப் போடு அவனைத் தடுத்தாள். அவன் கேட்பதாயில்லை. வீட்டு மூலைக்கு ஓடினான். முரட்டுக் கம்பு ஒன்றைக கையிலே எடுத்துக்கொண்டான். தெருப் பக்கம் வந்தான். கற்பூரம், அவன் காலடியில் விழுந்து தடுத்துப் பார்த்தாள். தங்கையை உதறித் தள்ளிவிட்டுப் புலிபோல ஒலியெழுப்பித் தெருவுக்கு ஓடினான் சிங்காரம்.

தொடரும்

தென்னார்காடு மாவட்ட

தி. மு. கழக 9-வது மாநாடு

1958, ஜூன் திங்கள் 7, 8 நாட்களில்

விருத்தாசலத்தில் நடைபெறும்.

★

தலைவர்:

மதுரை எஸ். முத்து

★

திறப்பாளர்:

கே. கே. நீலமேகம்

அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்து கொள்வர்.

இசைமுரசு நாகூர் அனிபா இன்னிசை,

அறிஞர் அண்ணா தலைமையில்

செல்வி மல்லிகா நடனம் உண்டு.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—

ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. வரவேற்புக் குழுத் தலைவர்.

எம். செல்வராஜ் எம்.எல்.ஏ பொருளாளர்.

சி. முனுசாமி, ஜி. சோக்கலிங்கம், சி. நடராசன் எம்.எல்.ஏ. எம். ஆனந்தன் எம் எல். ஏ. செயலாளர்கள்.

ரே. பிச்சமுத்து, பா. குப்புசாமி —தொ. ப. தலைவர்கள்.

பணம் பெற்று குணம் விற்போர் முடிவில் ஒருநாள் பிணமாவர்!

வைர நெஞ்சத்தையும் — உறுதி குலையாத இலட்சியப் பற்றையும்—ஆட்டம்கொடுக்கச் செய்யும் அற்புத சக்தி படைத்தது 'பணம்' என்பார்கள்!

புற்றைவிட்டு நாகம் வெளி வருகிறது என்றால், உடன் நாசமும் புறப்படுகிறது என்று தானே பொருள்!

அதுபோல் இரும்புப் பெட்டிக்குள்ளே புதையுண்டு கிடக்கும் பணக் கத்தைகள் வெளி யேறினால் பாதையில் குறுக்கிடும் இலட்சியங்கள் பலவற்றை வீழ்த்திக்கொண்டுதான் பவனியை நடத்தும் என்பது மிகச் சாதாரண உண்மை!

பணம் கைமாறுகிறது என்றால், 'பண்டமாற்று நிச்சயம் உண்டு-இது சுலபத்தில் மறுத்துவிடக்கூடிய ஒன்றல்ல!

பிரதிபலன் கருதாது பணப் பெட்டி திறந்து கொள்ளும்— இது சுலபத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதமுமல்ல!

ஆனால், இந்திய சர்க்கார் இந்த 'கஜானா இலக்கண'த்திற்குத் தருகின்ற விளக்கம் மிகமிக வேடிக்கையாக இருக்கிறது!

"அரசியல் கட்சிகளுக்கு வியாபார வேந்தர்களும், பணப் பெருச்சாளிகளும் நன்கொடைகள் தருவதைத் தடை செய்ய வேண்டும்!"

—இப்படி மசோதா ஒன்று டெல்லி பாராளு மன்றத்திலே கொண்டுவரப்பட்டது, பரூக்வா என்ற தனிப்பட்ட ஒருவரால்!

மசோதா என்ன 'கதி'க்கு ஆளாகியிருக்கும் என்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டுமா?

இதனால் பெருமளவு பாதிக்கப்படக்கூடிய கட்சி எது என்று யோசித்தால், மசோதா குப்பைக் கூடைக்குச் சென்றுவிட்ட உண்மை எளிதில் புலப்பட்டுவிடும்!

"இப்படி நன்கொடை பெறுவதால் என்ன தவறைக் கண்டுவிட்டீர்கள்?" என்று கேட்டார் அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி!

மசோதா நிராகரிக்கப்பட்டுவிட்டது!

ஏன்?

வெள்ளிப் பணத்தை இலட்சம் இலட்சமாகப் பெற்றுக் கொண்டு, மக்கள் நலனுக்குக் கொள்ளிவைக்கும் குள்ளநரி மனம் படைத்தவர்கள் இதை ஏற்றுக்கொள்வார்களா?

எழுபதாவது வயதை நெருங்கிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் இயக்கத்தின் வரலாற்றை நாம் அலசிப் பார்த்தால், சுதந்திரப் பரணி பாடியநேரத்தில் சொந்த வாழ்க்கையை கருக்கிக்கொண்டோர்—பந்தம் பாசத்தை உதறித் தள்ளியோர்—உயிருக்கு மேலான நாட்டு விடுதலைக்குத் தங்களது உடல், உயிர் இரண்டையும் துணிந்து காணிக்கை தர முற்பட்டோர் — இப்படிப் பலரைக் காண முடிந்தது! ஆனால் இன்றைய நிலை என்ன?

கொள்கையைக் காட்டியோ—இலட்சியத்தின் சிறப்பை விளக்கியோ — சாதனைகளின் பட்டியலை மக்களின் முன் பரப்பியோ அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை; ஆட்சி வண்டியைச் செலுத்தும் ஏகபோகச் சாரதியாக விளங்கவில்லை!

பண்புள்ள இதயங்களைத் துளைத்து —பரிதாபத்திற்குரிய பாமரர்களின் பகுத்தறிவைக் கொன்று—பாதாளம் வரையில் தடையின்றி பாயும் 'பண பாணம்' பேசிற்று!

பணம் கொடுத்து வாங்குகிறார்கள் பாராட்டுரைகளை! பேரம் பேசி, விலைவைத்துப் பெறுகிறார்கள், மக்களின் வாக்குரிமைகளை!

ஆமாம்; பணம் கொடிகட்டிப் பறக்கிறது; கொள்கை சரிந்து வருகிறது!

இந்த நேரத்தில் 'அப்படிப் பணம் பெறுவது தடுக்கப்படத்தான் வேண்டும்' என்ற தடையை விதிக்க எப்படித் துணிவார்கள் அவர்கள்?

பண முதலைகளின் தயவின்றித் துவங்கிய இயக்கம் — சீமான் வாழ்வைத் துறந்துஎளிமையின் பெருமையை உலகத்துக்கு எடுத்தோதிய உத்தமர்கள் கையில்—இந்த 'இலட்சிய சித்தி'க்கான பொருள் எங்கிருந்து கிடைக்கும்?

பணம் படைத்த முதலாளிகள்—ஆலையரசர்கள் திருவோடு ஏந்தி நிற்கும் காங்கிரசைக் கடைக் கண்ணால் நோக்கினர்! 'வறியர்களின் தோழன்' என்று கர்வத்தோடு பேசித் திரிந்த காங்கிரஸ் அந்த கஜானாக்களின் காலடியில் தஞ்சமடைந்தது!

தேவைக்கு அதிகமாகக் கோடி கோடியாக குவிகிறது, 'நன்கொடை' என்ற திரையிலே பணத் திமிங்கிலங்களிடமிருந்து!

ஆனால், "இதனால் என்ன தவறு என்று கேட்கிறது?" இந்திய அரசாங்கம்!

காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளின் பேரில் கொண்ட காதலாலா அவர்கள் பணத்தைக் குவிக்கிறார்கள்?

பிரதிபலன்கருதாமலா பணப் பெட்டி திறந்து கொள்ளுகிறது?

கருத்துக் குருடர்கள்கூட இந்த வாதத்திற்குத் தலையசைக்கமாட்டார்கள்!

காங்கிரஸ் நன்றி மறக்காத இயக்கம்!

ஓட்டளித்து உயரே அனுப்பிய இந்த நாட்டின் பராரிகளின் நன்றியை அல்ல! ஆட்சி பீடத்தின் தனிப் பார்வையில் எப்போதும் உலவிக் கொண்டிருக்கும் இந்த நாட்டுப் பொருளதிபர்களின் நன்றியை!

காங்கிரசுக்குத் தேவைப் பட்ட நேரத்தில்—தேர்தல் சமயத்தில் பொருளுதவி செய்வோம்; நன்றி மறக்காது காங்கிரஸ்; பதவிக்கு வந்ததும் சலுகைகள் என்ற பெயரிலும்; 'பர்மிட்டு'கள் என்ற பெயரிலும் அது கைம்மாறு செய்துவிடும்!

இந்த நம்பிக்கை அந்த 'நன்கொடையாளர்களுக்கு' நிச்சயம் உண்டு!

இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் இலட்சக்கணக்கான ரூபாய்கள் காங்கிரஸ் இயக்கத்தின் படாடோபச் செலவுகளுக்குக் கொட்டித் தரப்படுகின்றன!

சலுகைகளும் திருப்பிக் கிடைக்கின்றன—'பர்மிட்டுகள்' வாயிலாக — 'லைசென்ஸ்'கள் மூலமாக!

அதோடுமட்டுமல்ல; அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பு தராது, துணிந்துமீறி, தம் வழி சொல்லும் தைரியமும் தானே கிடைக்கிறது!

அரசாங்கத்திற்கு முறைப்படி செலுத்த வேண்டிய வரிப் பணத்தைத் தராமலிருப்பதற்கும் தள்ளிப்போடுவதற்கும் வலிமைபெற்று விடுகிறார்கள்!

பணமூட்டைகளுக்குப் பல்லிளிப்பதால் காங்கிரஸ் அறுவடை செய்துவரும் ஆபத்தான பலன்கள் இவைபோல ஏராளம்! ஏராளம்!

என்றாலும், இந்திய சர்க்கார் நன்கொடைகளைத் தடைசெய்யும் மசோதாவைத் தள்ளுபடி செய்து, தன் வழக்கமான வழியிலேயே நடைபோட விரும்புகிறது!

திருவாரூர் மாநாடு சிறப்பு மலர்.

★

அறிஞர் அண்ணா அவர்கள் ஆரூர் மாநாட்டில் கழகத்தின் நடவடிக்கைகள்—நிகழ்ச்சிகள் — அனைத்தும் என்றென்றும் நிலைத்திருப்பதுபோலவும், ஏனையோர் உணர்ந்து கொள்ளவும் ஏற்ற வகையில் தொகுத்தளிக்கப்படுதல் வேண்டுமெனச் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

அதனையொட்டி முரசொலி வெளியீடாக திருவாரூர் மாநாட்டுச் சிறப்பு மலர் ஒன்று வெளியிட முடிவு செய்திருக்கிறோம்.

அதில்:

★ கிளைக் கழக விபரங்கள்—கிளைக் கழக செயற் குழுவினர் பெயர்கள்—இடம் பெறுகின்றன. தஞ்சை மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் உடனடியாக தத்தமது விபரங்களை அளிக்க வேண்டுகிறோம்.

★ மாநாட்டிற்கு அலங்கார வண்டிகள் அமைத்து வந்த கழகங்களின் விபரங்களும் தேவைப்படுகின்றன.

★ நிதிக் கூட்டங்கள் நடத்திய ஊர்களின் விபரமும் தேவைப்படுகிறது; வெளியிடுவதற்காக!

★ தனி நன்கொடை அளித்த கழகங்களின் பெயர்களும் மலரில் இடம் பெறுகின்றது; பாராட்டுதலோடு!

★ இதுவரையில் வெளிவராத புகைப் படங்கள் பல இடம்பெறுகின்றன. திரைப்படம் எடுக்கப்பட்ட "பிலிம்"லிருந்து தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ள நிழற் படங்கள் மலர் முழுதும் திகழும். மற்றும் புதிய நிழற் படங்கள் அனுப்பி உதவுவோர் விரைவில் அனுப்பி வைத்தால் நலம்.

★ மூவண்ண முகப்பு—புதிய கட்டுரைகள்—கவிதைகள்—அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர், கழக முன்னணி வீரர்கள் தருகின்ற மாநாட்டுப் பாராட்டுரைகள்!

★ இன்னும் தோழர்கள் எழுதியனுப்புகிற சுவைமிக்க மாநாட்டு நிகழ்ச்சித் துணுக்குகள்!

இத்தனை சிறப்புடன் ஜூன் முதல் வாரத்தில் வெளிவருகிறது!

விலை 8 அணா

(கழிவு 25 சதவிகிதம்)

[விற்பனையாளர்கள் உடனே தேவைக்கு கழிவு நீங்கிய முன்பணத்தை அனுப்ப வேண்டுகிறோம். தனிப் பிரதி தேவையானோர் 60 புதுக் காசுகளுக்கு தபால் தலைகள் அனுப்ப வேண்டுகிறோம்.]

–நிர்வாகி, முரசொலி

முற்றுப் புள்ளி!...

இதை நினைத்ததும் அவன் நெஞ்சு துணுக்குற்றது! ஆயிரமாயிரம் வினாக்குறிகள் அவன் மனக் கண்முன் கிளம்பி நின்றன. "அடுக்குமா இந்த அக்ரமம்?" என்று கேட்டன! "உனக்கென்ன இருதயமே இல்லையா? அதிலே நட்பு எனும் நல்லுணர்வு அற்று விட்டதா?" என்று சாடின!

அவன் தவித்தான்! சாகாத சோகத்தால் மனம் தடுமாறினான்!

இன்னும் எத்தனை நாட்கள் அந்த வேதனையை அவன் தாங்க முடியும்? முடியாது; முடியாது—ஒருக் கணமும் முடியாது என்று எங்கிருந்தோ அலறியது உள்ளத்திலே இருந்து ஒரு குரல்!

அதிசயம்தான்!

அவனிடமிருந்து எதிர்பார்க்கக் கூடியதா அந்த நல்ல குணத்தை? நல்ல பண்பை — வெல்லமென இனிக்கும் அன்புச் சொற்களை தன்னிடத்திலிருந்து விரட்டி ஓட்டும் தனி 'இன'மல்லவா அவன் சார்ந்திருப்பது! பணக்காரர்களின் ஏகபோக சக்தியான அந்த மூர்க்க குணம் எங்கே சென்று விட்டது?

கொடைக்கானல் குளிரும், மலைச்சாரல் வனப்பும் தன் மகனது உள்ளத்திலே மகிழ்ச்சியைப் பாய்ச்சும் என்றுதான் எண்ணி அழைத்து வந்தார், வரதராசபுரம் ஜமீன்தார்! ஆனால், தந்தையின் ஆசையிலே மண் தூவி அந்த ஜெகநாதன் அவன் நினைவாகவே வாடினான். தூரத்தாலும், காலத்தாலும் அழிந்துவிடக் கூடியதல்ல நட்பு—இதை அந்தச் சீமான் அறியாமல் போனதுதான், விசித்திரம்!

•

இரவு வெகு நேரமாகிவிட்டது! படுக்கையில் புரண்டு கொண்டேயிருந்த ஜெகநாதனுக்குத் தூக்கமே வரவில்லை. எங்கிருந்தோ ஒரு குரல்—அவனை அழைப்பதைப் போல உணர்ந்தான்...

"யாரது?......"——அவன் கேட்டான்.

".........."—பதில் இல்லை.

"யாரு?..."

"மோரு!..."

இந்தக் கிண்டலும் விளையாட்டுக் குணமும் கொண்டவன் யார்? அவன்...அவன்தான்!

ஜெகநாதன் இரு கண்களையும் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான்! அதோ....அதோ....தூரத்தில் மெல்ல மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தான் தங்கப்பா! அவனைக் கண்டதும் எழுந்து அவனருகே ஓடவேண்டும் போலிருந்தது ஜெகநாதனுக்கு! ஆனால், தங்கப்பா ஏன் நின்று விட்டான்?

"தங்கப்பா!......ஏன் அங்கேயே நின்றுவிட்டாய்? ஓடி வா!.......ஓடி வா ..." என்று அலறினான் அவன்!

"மாட்டேன்!.........நான் மாட்டேன்!...நான் உன் வீட்டுக்கு வர மாட்டேன்!......நீ வா......இங்கே வா!..." என்றான் தங்கப்பா.

"ஏன் தங்கப்பா?..."—ஜெகநாதனின் கண்களில் நீர் ததும்பி நின்றது!

"ஏனா?...அங்கே ...அங்கே...உன் அப்பா இருப்பார்! நான் மாட்டேன்!" என்றான் தங்கப்பா. திரும்பி ஓட ஆரம்பித்தான்!

"தங்கப்பா...தங்கப்பா!" என்று அலறிக் கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தான் ஜெகநாதன்! எதிரே தங்கப்பா இல்லை; அவனது 'தங்க' அப்பாதான் நின்று கொண்டிருந்தார், கோபம் பொறி பறக்கும் கொடிய கண்களுடன்!

"இங்கே வந்துமா, அந்தப் பிச்சைக்காரக் கழுதையின் நினைவு உனக்கு? வெட்கமாக இல்லை?..." என்று கத்தினார்.

ஜெகநாதன் விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்!

முற்றுப்புள்ளி

"அந்தப் பஞ்சையின் நினைவுக்கு என்று முற்றுப்புள்ளி வைக்கிறாயோ; அன்றுதான் நீ உருப்படுவாய்!" என்று இரைந்துவிட்டு அப்பால் சென்றுவிட்டார் அப்பா!

மாளிகைக்கும் மண் குடிசைக்கும் இடையே உலகம் கற்பித்தது ஏராளமான ஏற்றத் தாழ்வுகள்! ஆனால் அவைகளை எல்லாம் கடந்து நிற்பதுதான் நட்பு—என்று இதுவரை நினைத்துக் கொண்டிருந்தான் ஜெகநாதன்! அதனால்தான் தங்கப்பாவிடம் அவன் இதயம் ஒன்றிப்போனது! தங்கு தடையின்றி வளர வேண்டிய அந்த நட்புக் காவியத்திற்கு முற்றுப் புள்ளியும் எங்கிருந்தோ காத்துக் கொண்டு நிற்கிறதே!

கொடைக்கானலுக்கு வந்தால் தீயென தகிக்கும் வெப்பம் தணியும் என்பார்கள். தீயை உண்டாக்குவது கடினமல்ல; ஆனால் அதை அணைப்பதும் சுலபமல்லவே! அப்படித்தான் ஜெகநாதனின் உள்ளத்திலே கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நட்புத் தீயை அணைக்கவே முடியவில்லை! அவனது பணக்கார அப்பா கைக்கொண்ட வழிகள் அனைத்தும் பயனற்றுப் போயின!

தூரத்து நிலா வொளியில் தக தக வென்று வெள்ளிபோல் மின்னிக் கொண்டிருந்தது கொடைக்கானல் ஏரி! அதையே வெகுநேரம் வரை பார்த்துக் கொண்டிருந்த ஜெகநாதனின் மனக் கண்முன் அந்தச் சம்பவம் திடீரெனத் தோன்றியது.

அவன் மறக்க முடியுமா அந்த தினத்தை? குறும்புக்கார தங்கப்பா 'தொடை நடுங்கி' என்று தன்னைக் கிண்டல் செய்த நிகழ்ச்சி அவ்வளவு சுலபத்தில் அழிக்கப் படக் கூடியதா, என்ன?

•

ஊரில், உச்சி மாடியில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஜெகநாதனை குளக்கரையிலே நின்று கொண்டிருந்த தங்கப்பா சைகை காட்டி அழைத்தான். ஜெகநாதன் பயந்தான்.

"நான் குளிக்கப் போகிறேன்! நீரிலே குதித்து நீச்சலடிக்கப் போகிறேன்! நீ வரமாட்டாயா?... ஐய்யோ, தொடைநடுங்கி!" என்று கத்தினான் தங்கப்பா!

ஜெகநாதன் மாடியை விட்டுக் கீழே இறங்கினான். பேப்பருக்குள் மூழ்கிக் கிடந்த அப்பாவின் கண்களில் படாமல் குளந்தங் கரைக்கு ஓடி வந்து விட்டான். ஆனால் அவனுக்குப் பின்னாலேயே ஆபத்து ஒன்றும் ஓடி வந்ததை அவன் அறியான். அந்த ஆபத்தில் சிக்கித் தவிக்கப் போகிறவன் பரிதாபத்துக்குரிய தங்கப்பா என்பதையும் அவனால் எப்படி உணர முடியும்!

நண்பர்கள் இருவரும் நீரிலே குதித்து — நீந்தி — கும்மாளமடித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கரையிலே பிரசன்னமானார், ஜெகநாதனின் அப்பா! இருவரும் பயந்து கொண்டு கரையேறினார்கள்!

அந்த நேரத்தில் தானா கரையிலே கிடந்த பெரும் கழி ஒன்று அவரது கைகளில் கிடைக்க வேண்டும்; கண்களில் தங்கப்பாவும் தென்பட வேண்டும்?

என்ன நடந்திருக்கும்?

"வேண்டாமப்பா! வேண்டாமப்பா!" என்ற ஜெகநாதனின் கூக்குரலையும், "ஐயோ! ஐயோ!" என்ற தங்கப்பாவின் அலறலையும் கவனியாது தங்கப்பனை சித்ர வதை செய்து விட்டார் அவர்.

குளத்தங்கரையிலே ஆதரவற்ற நிலையில் வீழ்ந்து கிடந்தான் தங்கப்பா—மகனைப் பிடித்து பரபர வென்று இழுத்துச் சென்று விட்டார் மாளிகைவாசி!

கொடைக்கானல் புறப்பட்டு விட்ட அந்த மாளிகையின் கார் குளக்கரையைக் கடந்தபோது ஜெகநாதனின் நீர் நிறைந்த கண்கள் வெளியே எட்டிப் பார்த்தன! தூரத்தில் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தான் தங்கப்பா!

"தங்கப்பா!..." என்று அலறினான் ஜெகநாதன்!

தங்கப்பா திரும்பவில்லை—குரல் காதில் விழவில்லை!

•

ஜெகநாதனின் உள்ளத்திலே திடீரென்று ஓர் எண்ணம்...தங்கப்பாவுக்குக் கடிதம் எழுதினால் என்ன?...அதுதான் சிறந்த வழி என்று எண்ணியவுடன் அவசர அவசரமாக எழுத உட்கார்ந்தான்:

"தங்கப்பா!...என்னை மன்னிச்சுடு! தங்கப்பா!......எங்கப்பாவுக்காக என்னை நிச்சயம் மன்னிச்சுடுவியா? நான் இங்கே கொடைக்கானல்ல உன் நினைவாகவே இருக்கேன். சீக்கிரமா அங்கே வந்துடறேன். ஆற்றங்கரை மணல் மேட்ல வழக்கம்போல் விளையாடலாம்; குளத்திலே நீச்சலடிக்கலாம்! எங்கப்பா உன்னை அடிச்சுப் பிட்டாங்களேங்கிறதுக்காக என்னோட "டு" விட்டுடாதே தங்கப்பா! என்னை மறந்துட மாட்டியே?......என் விலாசம் இதுல குறிச்சிருக்கேன்! நிச்சயமா பதில் போடு!"

கடிதம் தபாலில் சேர்க்கப்பட்ட பின்புதான் ஜெகநாதன் மிகவும் வேதனைப்பட்டான்! தினம் தவறாது தபால்காரனை எதிர்பார்த்து ஏமாந்தான்.

ஊருக்குத் திரும்புவது குறித்து அவனது தந்தை எந்த முடிவும் செய்யவில்லை என்றாலும், ஜெகநாதனின் மனநோய் அவரைப் பெரிதும் கலக்கமடையச் செய்தது. ஜெகநாதனின் முகத்திலே களிப்பில்லை; சிரிப்பில்லை! ஒரே கவலை ரேகைகள்! பெற்றவர்—இதயம் இரும்பு தான் என்றாலும் தாங்க முடியவில்லை அவரால்! கிராமத்திற்குத் திரும்புவது என்றும் முடிவு செய்துவிட்டார்!

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் ஜெகநாதன் துள்ளிக் குதித்தான். அப்பாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு மகிழ்ந்தான்! எத்தனை நாட்களுக்குப் பிறகு தனது அன்பு நண்பனை—ஆசையும் நேசமும் கொண்ட தங்கப்பாவை அவன் சந்திக்கப் போகிறான்!

•

மாளிகை வாசலில் கார் நின்றதும், கதவைத் திறந்து கொண்டு முதலில் இறங்கியவன் ஜெகநாதன்தான்!

"சின்ன எஜமான்!" என்று பூரிப்புடன் அவனைத் தூக்க வந்த வேலைக்காரர்களின் கைகளில் சிக்காமல் அவன் தலை தெறிக்க ஓட ஆரம்பித்தான்.

"ஜெகநாதா! எங்கே போகிறாய்?" என்று அப்பா கேட்டதற்குக்கூட அவன் பதில் சொல்லவில்லை. அவன் கால்கள் தங்கப்பாவின் குடிசையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன!

அதோ, குடிசை நெருங்கிவிட்டது!

வேகமாக ஓடிக்கொண்டிருந்த ஜெகநாதனின் கால்களில் எதுவோ தட்டுப்பட்டது. குனிந்தான். எடுத்தான். அது ஒரு கடிதம்...... தங்கப்பாவின் எழுத்துக்கள். அவசர அவசரமாகப் படித்தான்:

"அன்புள்ள எசமான்!.......நான் இனிமே உங்களை அப்படித்தான் கூப்பிடுவேன்! அப்பதான் உங்களுக்கும் எனக்கும் ஏற்றத் தாழ்வு இருப்பது என் பாழாப் போன கண்களுக்குப் புலப்படும்! நீங்கள் எப்ப வேணுமின்னாலும் கொடைக்கானல்லேருந்து வாங்க! ஆனா தயவு செஞ்சி என்னைப் பார்க்க வராதீங்க; என்னோட விளையாட வராதீங்க! ஏன் தெரியுமா? அன்னைக்கு உங்க அப்பா தந்த தண்டனை இப்ப என்னை படுக்கையிலேயே போட்டுடுச்சி...மறுபடியும் அப்படியானால்......என்னால் தாங்க முடியாது எசமான்!...உடனே முற்றுப்புள்ளி வச்சுட வேண்டியதுதான்!...நம்ப நட்புக்கு முற்றுப் புள்ளி வச்சுட வேண்டியதுதான்! தயவு செஞ்சு இனிமே எனக்குக் கடிதம் எழுத வேண்டாம்!"

ஜெகநாதனின் கண்களில் நீர் நிறைந்து விட்டது!

தனக்கு தங்கப்பா எழுதிய பதில் கடிதம் தபாலில்கூட சேர்க்கப்படாதது ஏன்—என்ற குழப்பத்தோடு நடந்தான் ஜெகநாதன்!

குடிசையை நெருங்கினான். கதவைத் திறந்தான்! கதவு தானே திறந்து கொண்டது! உள்ளே எட்டிப் பார்த்தான்!

தங்கப்பாவைக் காணோம்!

சுற்று முற்றும் பார்த்தான்... மூலையில் கிடந்த பாய் ஒன்றில் சுருண்டு கிடந்தார்கள் தங்கப்பாவின் தாய்!

"அம்மா! தங்கப்பா எங்கே?"—ஜெகநாதன் மெதுவாகக் கேட்டான்.

அந்த அம்மா தலையைத் தூக்கி ஏறிட்டு நோக்கினார்கள். அவர்களது கண்கள் அழுது அழுது வீங்கிப்போய் இருந்தன!

"எங்கேயம்மா, தங்கப்பா?..."—ஏதும் புரியாத ஜெகநாதன் மீண்டும் உரக்கக் கூவினான்!

"ஆற்றங்கரையிலே...!" என்றார்கள் — அவர்களுக்கு ஏனோ தொண்டை அடைத்தது!

"விளையாடிக் கொண்டிருக்கிறானா?......"——ஜெகநாதன் துடித்தான்!

"இல்லை; தூங்கிக் கொண்டிருக்கிறான்!"

"இந்த நேரத்திலா? நான் போய் எழுப்புகிறேன்!" என்று திரும்பினான் ஜெகநாதன்!

"முடியாது தம்பி! அவன் மண்ணுக்கு அடியிலே தூங்கிக் கொண்டிருக்கிறான்!"

—அந்த அம்மா 'ஓ'வென்று அழ ஆரம்பித்து விட்டார்கள்!

ஜெகநாதன் சிலையாக நின்று விட்டான்!

முற்றுப் புள்ளிதானே விழுந்து விட்டது!

—சொர்ணம்

தஞ்சையின் எழுச்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் எல்லாம் வந்துவிடுவார்கள் அல்லவா?" என்று ஐயம் எழுப்புவோரும்—அவர்கள் அச்சம் தவிர்ப்போரும் — இப்படி மாநாட்டில் பலவகைக் காட்சிகள்; மாநாடு துவங்குகிற வரையில்!

இவ்வளவு பெரிய பந்தல் போட என்னிடம் மரங்கழிகள், கீற்று, மூங்கில் இல்லையென்று பந்தல்காரர் கைவிரித்துவிடுகிறார்; மாநாட்டுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு! அன்றுதான் சகோதரர் அரங்கண்ணல் அவர்களும், அன்புத் தோழர் செழியன் அவர்களும், மதுரை வீரராம் எஸ். முத்து அவர்களும் மாநாட்டு வேலைகளில் முன் கூட்டியே கலந்துகொள்ளும் ஆர்வத்துடன் ஆரூர் வந்தடைந்து எங்களுக்கு மேலும் உற்சாகமளித்தனர். மழை பொழிகிறது—பந்தல் முக்கால் பகுதியே முடிந்திருக்கிறது—மீதியை முடிக்க கீற்று, மரம் கிடைக்கவில்லை. பந்தல் முழுதும் சேறு! உளை! நிற்கவும் இடமில்லை! ஓடுகிறோம் மூலைக்கு ஒருவராக! ஆளுக்குக் கொஞ்சம் கீற்று — மூங்கில்—கொண்டு வருகிறோம். ஆற்று மணல் ஏற்றிக் கொண்டு வண்டிகள் பறக்கின்றன. பந்தல் முழுதும் மணல் பரப்பப்படுகிறது. நூற்றுக் கணக்கான வண்டிகள் ஆற்று மணல்! மழையோடு மழையாக வேலை—அதோடு பந்தல் அலங்காரங்கள் வேறு!

இயற்கையை எதிர்த்து நடைபெற்றபணியில் இறுதி வெற்றி நமது தோழர்களுக்கேதான். இனி என்ன மழை பொழிந்தாலும் கவலையில்லை — நடப்பது நடக்கட்டும் என நகை முழக்கி நடை பயிலுகின்றனர் தோழர்கள்.

அதை இப்போதும் என் மனக் கண் முன்னே காணுகிறேன். உணர்ச்சி கொள்ளுகிறேன். மாநாட்டுப் பந்தலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த தொலைபேசி மணி "டிரிங், டிரிங்" என அடிக்கும். யார் என்று கேட்டால், "நான் திருச்சியிலேயிருந்து பேசுகிறேன் — சென்னையிலேயிருந்து பேசுகிறேன் — குடந்தையிலேயிருந்து பேசுகிறேன் — இங்கு மழை தாங்கவில்லையே-திருவாரூரில் எப்படி? மாநாடு நடக்குமா?"

—இதுபோலக் கேள்விகள் வேறு நம்மை அயர வைக்கும், மழைக்குப் பயந்து மக்கள் வராமல் இருந்து விடுவார்களோ என்று!

ஒரேயடியாக அனைவரையும் மிரட்டிக் கொண்டிருந்த மழை, மாநாட்டுக்கு எதிர்ப்பு காட்டுவதுபோல் நடந்து கொண்ட மழை, கடைசியாக மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு எந்த அளவு ஒத்துழைத்தது என்பதை நினைக்கவே நெஞ்சு இனிக்கிறது.

மாநாட்டுக்கு மக்கள் எதிர்பார்த்த எல்லோரும் வந்திருந்தார்கள். மழை மட்டும் வரவில்லை வராதது மட்டுமல்ல; கோடையின் கொடுமை தெரியாமல் குற்றாலத்தைப்போல ஒருநாள் முழுதும் திருவாரூரை மாற்றி வைத்திருந்தது இயற்கை! "மாமழை போற்றுதும்—மாமழை போற்றுதும்!" என்ற வாழ்த்து முழக்கத்தை மக்கள் இயற்கையின் செவிகளுக்கு எட்டச் செய்தனர்.

வான்மழை வராவிடில் என்ன —இதோ சொல் மழை பொழிகிறோம் எனக் கழகத்து முன்னணி வீரர்கள் தனித் தனி தலைப்புகளில் ஆற்றிய கருத்துரைகள் அத்தனையும் செங்கரும்பு—தேன் துளிகள்! மாணவர் படையின் முரசொலியாய்-மாணிக்கக் குன்றாய் — மறத்தமிழர் சேனைக்குத் தளபதியாய் விளங்குகின்ற மதியழகன் தலைமையுரை — விடுதலை வீரருக்கு ஒரு படைக்கலன் என்பேன்!

அண்ணாமலைத் தந்த ஆற்றல் நிறை தோழர் — அன்புடைய நண்பர் — பண்புடைய காலை சண்முகத்தின் துவக்க உரை—தூய நம் கொள்கைக்குத் துணை நிற்கும் தீபஜோதி என்பேன்!

நாவலர் பேசினால், நாவெல்லாம்—கேட்போர் காதெல்லாம் —நாடெல்லாம் தமிழ் மணக்கும்—அந்த மணத்தை ஆரூரில் பெற்றவர்கள் ஆற்றல் பெற்றார்—ஆண்மை பெற்றார் — அடிமை நிலை தகர்த் தெறிய ஊக்கம் பெற்றார்!

வடநாட்டில் நம் கழக நிலையை வளையாது, துவளாது, வடித்தெடுத்து வைத்திட்டார், வஞ்சகரின் இடுப்பொடிக்கும் வலிவு மிக்க நாவன்மை படைத்திட்ட நம் தோழர் சம்பத்து!

அழகு தமிழ் — அன்பு சுரக்கின்ற நெஞ்சு—ஆற்றல் விளைக்கின்ற பார்வை — அரசியல் மேதா விலாசம் காட்டுகின்ற செயல் — அத்தனைக்கும் இருப்பிடமாய்த் திகழுகின்ற நம் அண்ணாவின் பேச்சினிலே தஞ்சைக்கு வாழ்த்து சொன்னார். "பார் தஞ்சையை—என இங்கிருக்கும் ஏராளமான மக்களையும், இருபதாயிரம் ரூபாய் மிச்சமென்ற மகிழ்ச்சியையும் காட்டினால் போதாது! அடுத்ததடவை எத்தனை பேரை சட்ட சபைக்கு அனுப்பப் போகிறோம் என்ற கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ளவேண்டும்!" எனும் கருத்தை வலியுறுத்தி ஜனநாயக முறைக்கு விளக்கம் தந்தார். நமைத் திட்டுவதையே வேலையெனக் கொண்டுள்ள எதிர்க் கட்சியினர்க்குப் படுகின்ற விதத்தினிலே அறிவுரை பகன்றார். கண்மூடிக் காங்கிரசை அணைத்திருக்கும் திராவிடர் கழகத்தினரின் கண் திறக்க வழியொன்றும் சொன்னார். தஞ்சையின் கண் திறந்தது. மூடிக் கிடந்த செவிகளில் ஒலி புகத் துவங்கிவிட்டது. கிழிந்துபோன முரசு மீண்டும் சீர்பட்டு முழங்குகிறது.

"கூனன் நிமிர்ந்து விடுவான்" என அண்ணா அடிக்கடி கூறுவாரே; அதுபோல இதோ—

கூனன் நிமிர்ந்து விட்டான்!

தஞ்சை எழுந்து விட்டது!

இனி, அதன் தலையைத் தாழ்த்த யாராலும் முடியாது!

இனி — தஞ்சை தி. மு. க. பாசறை!

அந்த உணர்வோடு, அதோ— ஆயிரமாயிரம் இளைஞர்கள் "திராவிடம் வெல்க!" எனச் சிந்து பாடிச் செயல் புரியப் புறப்பட்டு விட்டார்கள்!

அதற்கு ஆரூர் மாநாடு வழிகாட்டுகிறது—அதை நடத்திய அனைவரும் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

"முரசொலி" முக்கிய அறிவிப்பு.

★

முரசொலி ஏடு நான்கு ஆண்டுப் பணியில் வாசகர்களாகிய உங்களது பாராட்டுதலை எந்த அளவுக்குப் பெற்றிருக்கிறது என்பதை நாடு அறியும். எழில் மிக்க மலர்களை அளித்து ஏற்றம் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு கிழமையும் புதுமை காட்டியிருக்கிறது. ஆனால், சில வாரங்களாக முரசொலி உரிய நேரத்தில் தங்களுக்குக் கிடைக்கவில்லையென்பதையும் அதனால் தங்களின் மனக் குறையையும் நாங்கள் அறியாமலில்லை. தாள் தட்டுப்பாடும், தாள் விலையேற்றமுமே இந்த சங்கடத்திற்குக் காரணங்கள்! முன்னைவிட இரண்டு மடங்கு அதிக விலை கொடுத்தால்தான் தாமதமாகவாவது தாள் வாங்க இயலுமென்ற நிலை உருவாகிவிட்டது. இந்த நிலையில் மாதந்தோறும் "கணக்கேடு" காட்டுகிற நட்டமோ, முரசொலியை தொடர்ந்து நடத்துவதில் அச்சமூட்டுகின்ற அளவில் அமைகிறது. முரசொலி ஏராளமான பிரதிகள் செலவாகிறபடியால் போதுமான தாளை வாங்க மிக சிரமம் ஏற்படுகிறது. ஆகவே சில மாதங்களுக்கு, நிலைமை சீர்படும் வரையில் முரசொலி எட்டு பக்கங்களில் வெளிவரும், எழில் குறையாது. சில புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் கட்டுரைகள் வெளி வராதே தவிர, மற்றபடி எல்லா சிறப்புகளுடனும், ஆசிரியர் தொடர்ந்து எழுதும் 'நீட்டோலை'யுடனும், தொடர்கதையுடனும் முரசொலி தன் தொண்டினைத் திராவிடத்திற்குச் செய்யும். இதுவரை நீங்கள் காட்டிய ஆதரவைவிட இந்த சமயம் காட்டும் ஆதரவே சிறப்புடையதாகக் கருதப்படும்.

அன்புள்ள,

நிர்வாகி,

முரசொலி

திருச்சியில் "உதய சூரியன்"

குளித்தலை தோழர் முத்துகிருஷ்ணன் நிதிக்காக திருச்சி தேவர் மன்றத்தில் 17—5—58 அன்று இரவு 10 மணிக்கு மு. கருணாநிதி நடிக்கும் புதுமை நாடக மன்றத்தாரின் 'உதயசூரியன்' நாடகம் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. மழையாயிருந்தபோதும் நாடகத்திற்கு நாலாயிரம் ரூபாய்க்குமேல் வசூலாயிற்று. செலவுகள் போக, தலைமைக் கழகத்திற்கு ஒரு பகுதி அன்பளிப்பு தந்தது போக, தோழர் முத்துகிருஷ்ணனுக்கு இரண்டாயிரம் ரூபாய் நிதி அளிக்கப்பட்டது. இந்த நிதி நாடகத்திற்கு மாவட்டச் செயலாளர் அம்பில் தர்மலிங்கமும், மற்றும் நகர கழகத்துத் தோழர்களும் உடனிருந்து ஒத்துழைத்தது பாராட்டத்தக்கது.

இலக்கியத் தேனருவி -
ஒப்பற்ற அறிவுப் புதையல் -
புதிய எழில் பெற்று விளங்கும்
பொன்னேடு -
என்று நாடு போற்றிப் புகழும்

முத்தாரம்

ஐந்தாம் தேதியன்று
விற்பனைக்கு வருகிறது!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு